வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461-2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

**Annual Press Release** date : 14.05.2021

**In the midst of COVID-19 Pandemic, V.O. Chidambaranar Port handled 31.79 Million Tonnes of Cargo and 7.62 Lakh TEUs of Containers during the financial year 2020-21**

## 1. Traffic Performance

During the financial year 2020-2021, V.O. Chidambaranar Port Trust handled Cargo traffic of 31.79 Million Tonnes, against the previous year's achievement of 36.08 Million Tonnes, registering a decrease of 11.89%. Imports have accounted for 22.53 Million Tonnes (70.86 %) and Exports accounted for 9.18 Million Tonnes (28.90%) and Transhipment accounted for 0.08 Million Tonnes (0.24 %).

In terms of containers, the Port has handled 7.62 Lakh, Twenty Foot Equivalent Units (TEUs) of Containers in the year 2020-21, registering a decrease 5.22% over previous year's container traffic of 8.04 Lakh TEUs.

Inspite of COVID-19 pandemic sending shockwaves through the supply chains, shipping networks and Ports, leading to plummeting Cargo volumes during the last financial year, the Port's operational efficiency was not compromised and has created a number of notable records like;

I. Handling 106.54 Lakh tonnes of Coastal cargoes, surpassing the previous record traffic of 102.69 lakh tonnes.
II. M/s. PSA SICAL Container Terminal, handled 4,413 TEUs of containers, the highest volume from a single vessel, bettering the previous record of 3,979 TEUs of containers.

III. Unloading 56,687 Tonnes of Coal in 24 hours at Berth No.9, surpassing the earlier record of 55,785 tonnes.
IV. Handling 5,628 TEUs of Container in a single day, surpassing the previous record of 4,524 TEUs.
V. Handling 1,89,395 Tonnes of Cargo in a single day, surpassing the earlier record of 1,80,597 Tonnes.
VI. Handling longest wind blades of length 74.90 metres surpassing the previous longest wind blade of 72.40 metres.
VII. Handling 81,013 TEUs of Containers which is the highest ever number of TEUs handled by the Container Terminal in a single month, surpassing the previous highest performance of 80,474 TEUs of containers.

## 2. Financial Performance

V.O.Chidambaranar Port's Operating Income amounted to Rs. 549.51 Crores during 2020-21, as against Rs. 582.90 Crores during the previous year, and the Operating Surplus Rs. 322.63 Crores, as against Rs. 328.71 Crores in 2019-20. The Net surplus after Tax was Rs. 113.72 Crores as against Rs. 135.23 Crores.

## 3. Projects

The Port has initiated Proposals for Dredging of North Cargo Berth-III to a draft of 14.20 metres at an estimated cost of Rs.64.15 crores. In order to facilitate ships of Beam 49 metres and LOA of 366 (Existing Beam 48 metres , LOA 310 metres) to call VOC Port, widening of the Port's entrance channel from 152.40 Metres to 230 Metres at a cost of Rs. 15.24 Crores has also been taken up by the Port.

To cater the growing Container Traffic forecast, Port is in the process of developing its Third Container Terminal under Public Private Partnership.

To facilitate Ease of Doing Business, installation of State of Art Drive Through Container Scanner, having the capacity to scan 100 Trucks per hour, at a cost of Rs.47 crores is nearing its completion.

To ensure the safe handling of LPG & POL products as per OSID Guidelines, Port is revamping the Fixed Fire Fighting System at an estimated Cost of Rs 17.5 Crores.

As a trendsetter among Major Ports of the Country, the Port is all set to be become the 'First Green Port of India', by adopting an integrated Green Energy Port Model. The Port has taken up the installation of grid connected 5 MW ground-based Solar power plant at a cost of Rs.19.81 Crores. VOC Port has been a frontrunner in implementing various Green Port initiatives and has already installed 500 KW rooftop solar power plant. Installation of another 140 KW roof top solar project is in progress. The Port is also in the process of installing onshore and offshore wind turbines to harness wind potential at its premises.

The Port has also identified 2000 acres of land for setting up of Port-based industries (Tuticorin - SPEEDZ). In Phase-I, tenders were invited for allotment of 334.30 acres and the Port has received good response and Port land will be allotted to the successful bidders shortly for starting Port based Industries.

**4. Significant Events**

(i) As a part of world's largest evacuation mission by Indian Navy to repatriate the stranded Indian Nationals abroad, 'Samudra Setu' – (meaning 'Sea Bridge') under the 'Vande Bharat' Mission, was carried out through V.O. Chidambaranar Port on 4 occasions.

| No. | Date | Name of the Ship | Country | No of Stranded Indians Repatriated |
|---|---|---|---|---|
| 1 | 02.06.2020 | INS Jalashwa | Srilanka | 686 |
| 2 | 07.06.2020 | INS Jalashwa | Maldives | 700 |
| 3 | 23.06.2020 | INS Airavat | Maldives | 198 |
| 4 | 01.07.2020 | INS Jalashwa | Iran | 687 |
| TOTAL | | | | 2271 |

(ii) Shri Mansukh Mandaviya, Hon'ble Union Minister of State (Independent Charge) for Ministry of Ports, Shipping and Waterways and Mrs Aishath Nahula, Hon'ble Minister of Transport and Civil Aviation of Maldives, Republic of Maldives,

jointly launched the Cargo ferry service from India (Tuticorin and Cochin) to Maldives (Kulhudhuffushi and Male) through Video Conference on 21.09.2020

(iii) On 27.10.2020, Shri Mansukh Mandaviya, Hon'ble Union Minister of State (Independent Charge) for Ministry of Ports, Shipping inaugurated the 'Direct Port Entry Facility' at V.O. Chidambaranar Port. The Direct Port Entry facility operated by Central Warehousing Corporation at Port's Truck Parking Terminal would enable direct movement of containers from factories, without intermediate handling at any CFS, thus facilitating the shippers to Gate-in their factory stuffed exports directly to the Container Terminal on 24x7 basis.

(iv) On 25.02.2021, the Hon'ble Prime Minister of India, Shri Narendra Modi, dedicated the '8-laning of Korampallam Bridge and Rail Over Bridge' to the Nation and laid the foundation stone for '5 MW Ground-Based Solar Power Plant', at VOC Port, Tuticorin, through Video Conferencing from Coimbatore.

(v) In addition to the above, VOC Port facilitated sign-on/off of 2548 seafarers up to 31.03.2021 during pandemic, as per SOPs/guidelines issued by Director General Shipping.

**5. Preventive measure taken to contain the Spread of COVID infection**

(i) Vaccination drive is being carried out to vaccinate the employees of the Port, their family members and retired employees with the co-ordination of District Administration.

(ii) Regular screening of employees and residents of Port Quarters are being done to identify the COVID victims.

(iii) Periodical sanitization of Port infrastructure is being carried out to as per the sanitization schedule.

(iv) The Port Provides Personal Protective Equipment (PPE) Kits for use of employees of the Port.

(v) The Port imparts awareness to prevent COVID-19 through distribution of Hand bills, distribution of COVID -19 Manual, fixing of visuals at vulnerable points and through electronic means.

(vi) Port has established quarantine facility at various Port buildings at a cost of Rs.20 lakhs.

(vii) As a part of CSR activity, Port has established additional 54 bedded COVID-19 ward at a cost of Rs.25 lakhs.

Shri T.K. Ramachandran, IAS, Chairman, V.O. Chidambaranar Port Trust, remarked “Given the challenging environment due to the rippling economic effects caused by COVID, I take this opportunity to thank all the employees, Unions, Terminal operators, Port users and stakeholders for their unstinted service & support rendered to the Maritime Trade.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Trust, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
ISO9001:2015, ISO 14001 : 2015, OHSAS 18001:2007 & ISPS Compliant Port
SAGARMALA PORT-LED PROSPERITY
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office
மக்கள் தொடர்பு அலுவலகம்

தேதி :14.05.2021

**கொரோனா பாதிப்பு காலகட்டத்திலும் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் 2020-21 நிதியாண்டில் 31.79 மில்லியன் டன் சரக்குகளையும், 7.62 இலட்சம் டிஇயு சரக்குபெட்டகங்களையும் கையாண்டுள்ளது**

**1. கையாளப்பட்ட சரக்குகளின் செயல்திறன்**

வ.உ.சிதம்பரனார் துறைமுகம் கடந்த நிதியாண்டு 2020-21-ல் 31.79 மில்லியன் டன் சரக்குகளை கையாண்டுள்ளது. 2019-20 நிதியாண்டில் கையாளப்பட்ட 36.08 மில்லியன் டன் சரக்குகளை விட 11.89 சதவிகிதம் விழுக்காடு குறைவாகும். இறக்குமதியை பொருத்தவரையில் 22.53 மில்லியன் டன்களும் (70.86%), ஏற்றுமதியை பொருத்தவரையில் 9.18 மில்லியன் டன்களும் (28.90%) சதவிகிதமும், சரக்குபரிமாற்றம் 0.08 மில்லியன் டன் (0.24%) சதவிகிதமும் கையாண்டுள்ளது.

மேலும் துறைமுகம் சரக்குபெட்டகங்கள் கையாளுவதில் 2020-21 நிதியாண்டில் 7.62 இலட்சம் டி.இ.யுக்களை கையாண்டுள்ளது. கடந்த நிதியாண்டு கையாண்ட அளவான 8.04 டி.இ.யுக்களை ஒப்பிடுகையில் 5.22 % குறைவாகும்.

கொரோனா தொற்று உலமெங்கும் விநியோக சங்கலி, கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகங்களில் ஏற்படுத்திய நெருக்கத்தினால் 2020-21 நிதியாண்டில் துறைமுகங்களில் சரக்கு கையாளுதல் 2019-20 நிதியாண்டை விட குறைவாக இருந்தாலும் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் மேம்பட்ட சரக்கு கையாளும் திறனின் மூலம் சரக்கு கையாளுவதில் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தி உள்ளது, அவை:

1. 106.54இலட்சம் உள்நாட்டு சரக்குகளை கையாண்டு இதற்கு முந்தைய சாதனையான 102.69 இலட்சம் டன் சரக்குகளை கடந்துள்ளது.
2. வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திலுள்ள பி.எஸ்.ஏ. சிக்கால் (M/s. PSA SICAL) சரக்குபெட்டக முனையமானது ஒரே சரக்குபெட்டக கப்பலில் இருந்து 4,413 டி.இ.யு சரக்குபெட்டகங்களை கையாண்டு, இதற்கு முந்தைய சாதனையான 3,979 டி.இ.யு சரக்குபெட்டகங்களை விட அதிகமாக கையாண்டது.
3. கப்பல் சரக்கு தளம் -9ல், 56,687 டன் நிலக்கரியை 24மணி நேரத்தில் கையாண்டு, இதற்கு முந்தைய சாதனையான 55,785 டன்களை முறியடித்தது.
4. ஒரே நாளில் 5,628 டி.இ.யு சரக்குபெட்டகங்களை கையாண்டு, இதற்கு முன்பு 4,524 டி.இ.யு சரக்குபெட்டகங்களை கையாண்ட சாதனையை முறியடித்தது.

5. ஒரே நாளில் 1,89,395 டன் சரக்குகளை கையாண்டு, இதற்கு முந்தைய சாதனையான 1,80,597 டன்களை விட அதிகமாக கையாண்டு சாதனை படைத்தது.
6. இந்திய தயாரிப்பில் உருவான 74.90 மீட்டர் நீளம் கொண்ட மிகப்பெரிய காற்றாலை இறகுகளை கையாண்டு, இதற்கு முன்பு 72.40 மீட்டர் நீளம் கொண்ட காற்றாலை இறகுகளை கையாண்ட சாதனையை முறியடித்தது.
7. சரக்குபெட்டக முனையத்தில் ஒரே மாதத்தில் 81,013 டிஇயு சரக்குபெட்டகளை கையாண்டு, இதற்கு முன்பு கையாண்ட சாதனையை முறியடித்தது.

**2. நிதிநிலை செயல்பாடு**

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 2020-21 நிதியாண்டு இயக்க வருவாய் ரூபாய் 549.51 கோடி (2019-20 நிதியாண்டு இயக்க வருவாய் ரூபாய் 582.90 கோடி) ஆகும். 2020-21 நிதியாண்டு இயக்க உபரி வருவாய் ரூபாய் 322.63 கோடி (2019-20 நிதியாண்டு இயக்க உபரி வருவாய் ரூபாய் 328.71 கோடி) ஆகும். 2020-21 நிதியாண்டு வரி பிடித்ததற்கு பின்பு உள்ள நிகர உபரி வருவாய் ரூபாய் 113.72 கோடி (2019-20 நிதியாண்டு வரி பிடித்ததற்கு பின்பு உள்ள நிகர உபரி வருவாய் ரூபாய் 135.23 கோடி) ஆகும்.

**3. திட்டங்கள்**

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் ரூபாய் 64.15 கோடி செலவில் வடக்கு சரக்குத் தளம்-3-ஐ 14.20 மீட்டராக ஆழப்படுத்தும் பணி துவக்கப்படும் தருவாயில் உள்ளது. மேலும் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 49மீட்டர் அகலமும் மற்றும் 366 மீட்டர் நீளமும் (தற்போது 48மீட்டர் நீளம் மற்றும் 310 மீட்டர் அகலம்) கொண்ட பெரிய வகை கப்பல்கள் வருவதற்கு வசதியாக துறைமுக நுழைவுவாயிலை 152.40 மீட்டரிலிருந்து 230 மீட்டராக அகலப்படுத்தும் பணி ரூபாய் 15.24 கோடி செலவில் துறைமுகம் செயல்படுத்த உள்ளது.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் சரக்கு பெட்டகங்களின் போக்குவரத்தின் அதிகரிப்பு அவசியத்தை கருத்தில் கொண்டு மூன்றாவது சரக்குபெட்டக முனையம் பொது தனியார் கூட்டமைப்பின்கீழ் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எளிமையான வர்த்தகம் நடைபெறுவதற்கு வசதியாக ஒரு மணி நேரத்தில் 100 சரக்குபெட்டக வாகனங்களை ஸ்கேன் செய்யும் வசதி ரூபாய் 47 கோடி செலவில் நிறுவும்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. எண்ணெய் மற்றும் பாதுகாப்பு இயக்குநர் குழுமத்தின் வழிகாட்டுதலின்படி எரிவாயு மற்றும் எரிப்பொருள் தயாரிப்புகளை பாதுகாப்பாக கையாளுவதை உறுதி செய்யும் வண்ணம் தீயணைப்பான் அமைப்பு ரூபாய் 17.50 கோடி திட்டமதீப்பில் செயல்படுத்த உள்ளது.

அனைத்து பெருந்துறைமுகங்களுக்கும் முன் மாதிரியாக திகழும் வண்ணம் பசுமை ஆற்றல் திட்டத்தை செயல்படுத்தி இந்திய பெருந்துறைமுகங்களில் முதல் பசுமை துறைமுகமாக வ.உ.சிதம்பரனார் துறைமுகம் விரைவில் திகழ உள்ளது. இதன்படி 5 மெகாவாட் தரை சார்ந்த சூரியமின் சக்தி ஆலை ரூபாய் 19.81 கோடி செலவில் நிறுவ உள்ளது.

மேலும் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் உள்ள பல்வேறு கட்டிடங்களில் 500 கிலோவாட் திறன் கொண்ட மேற்கூறை சூரியமின்சக்தி ஆலைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மற்றொரு 140 கிலோவாட் திறன் கொண்ட மேற்கூறை எரிசக்தி திட்டமானது விரைவில் நிறுவப்பட உள்ளது. மேலும் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் கடல் மற்றும் நிலம் சார்ந்த பகுதிகளில் காற்றாலைகளை நிறுவுவதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

துறைமுகத்தில் தொழிற்சாலைகள் அமைய பெறுவதற்கு 2000 ஏக்கர் நிலப்பகுதியை (Tuticorin - SPEEDS) துறைமுகம் ஒதுக்கியுள்ளது. இதன் முதற்கட்டமாக 334.30 ஏக்கர் நிலப்பரப்பினை ஒதுக்குவதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டதில் பல்வேறு நிறுவனங்கள் ஆர்வமுடன் பங்கேற்றுள்ளன.

**4. குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்:**

(அ) உலகளவில் தாக்கப்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பினால் வெளிநாடுகளில் சிக்கி தவித்து வந்த இந்திய குடிமக்களை தாயகத்திற்கு அழைத்து வருவதற்கு இந்திய அரசு 'வந்தே பாரத்' என்ற திட்டத்தின்கீழ் 'சமுத்திர சேது' பணியின் மூலம் இந்திய கடற்படை கப்பல்கள் வ.உ.சிதம்பரனார் துறைமுகமாக மார்க்கமாக 4 முறை தாயகம் அழைத்து வந்ததுள்ளது. அவை

| வரிசை | நாள் | இந்திய கடற்படை கப்பலின் பெயர் | நாட்டின் பெயர் | தாயகம் திரும்பிய மொத்த இந்தியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 02.06.2020 | ஜலாஷ்வா | இலங்கை | 686 |
| 2 | 07.06.2020 | ஜலாஷ்வா | மாலத்தீவு | 700 |
| 3 | 23.06.2020 | 'ஐராவத்' | மாலத்தீவு | 198 |
| 4 | 01.07.2020 | ஜலாஷ்வா | ஈரான் | 687 |
| | | | மொத்தம் | 2271 |

(ஆ) 21.09.2020 அன்று திரு. மன்சுக் மண்டவியா, மாண்புமிகு மத்திய துறைமுகங்கள், கப்பல்போக்குவரத்து மற்றும் நீர்வழி போக்குவரத்து துறை இணை அமைச்சர் மற்றும் இராசயனம் மற்றும் உரங்கள் இணை அமைச்சர் அவர்களும் மற்றும் திருமதி ஆயிஷத் நஹீலா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் பயணிகள் விமான போக்குவரத்து அமைச்சர், மாலத்தீவு குடியரசு அவர்களும் இணைந்து இந்தியாவில் இருந்து (தூத்துக்குடி மற்றும் கொச்சின்) மாலத்தீவு (குல்ஹுதுபுஷி மற்றும் மாலே) வரையிலான சரக்கு போக்குவரத்து சேவையினை காணொலி காட்சி மூலம் துவக்கி வைத்தார்கள்.

(இ) 27.10.2020 அன்று மாண்புமிகு மத்திய துறைமுகங்கள், கப்பல்போக்குவரத்து மற்றும் நீர்வழி போக்குவரத்து துறை இணை அமைச்சர் திரு. மன்சுக் மண்டவியா அவர்கள் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திற்குள் ஏற்றுமதி சரக்குபெட்டகங்களை நேரடியாக

துறைமுகத்திற்குள் அனுமதிக்கப்படும் (Direct Port Entry- DPE) சேவையினை காணொலி காட்சி மூலம் இன்று துவக்கி வைத்தார்கள். மத்திய சேமிப்புகிடங்கு நிறுவனத்தினால் லாரிகள் நிறுத்தும் முனையத்தில் இயக்கப்படும் இச்சேவை ஏற்றுமதிக்கான சரக்குபெட்டகங்கள் தொழிற்சாலையில் இருந்து சரக்குபெட்டக நிலையங்களுக்கு செல்லாமல் நேரடியாக துறைமுகத்திற்கு எடுத்து செல்ல 24 மணி நேரமும் வழிவகுக்கும்.

(ஈ) 25.02.2021 அன்று மாண்புமிகு பாரத பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் கோயம்புத்தூரில் காணொலி காட்சி மூலம் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 8 வழிச் சாலையாக விரிவாக்கப்பட்ட கோரம்பள்ளம் பாலம் மற்றும் இரயில் மேம்பாலத்தின் சேவையை துவக்கி வைத்து 5 மெகாவாட் தரைதள சூரிய மின்நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

(உ) கொரோனா பெருந்தொற்று காலகட்டத்தில் கடந்த நிதியாண்டு வ.உ.சிதம்பரனார் துறைமுக மார்க்கமாக 2548 கப்பல் மாலுமிகள் பணி இறக்கம் மற்றும் பணி ஏற்றம் செயல்பாடுகள் இயக்குநர் ஜெனரல், கப்பல்துறை அவர்களின் வழிகாட்டுதலின்படி பிரத்தியோக செயலாக்க செயல்முறையினை பின்பற்றி நடைபெற்றது.

**5. கொரோனா பெருந்தொற்று பரவாமல் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

(i) தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்பினால் துறைமுக அதிகாரிகள், ஊழியர்கள், ஒப்பந்த ஊழியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் துறைமுக ஊழியர்களின் குடும்பத்தினர்கள் அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

(ii) துறைமுக ஊழியர்கள் மற்றும் துறைமுக குடியிருப்பு பகுதி மக்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என கண்டறிய பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகிறது.

(iii) அனைத்து துறைமுக செயல்பாடுகள் நடைபெறும் இடங்களிலும் கிருமி நாசினி கொண்டு தொடர்ந்து சுத்தப்படுத்தப்பட்டு வருகிறது.

(iv) துறைமுக ஊழியர்களுக்கு துறைமுக செயல்பாடுகளின் போது தங்களை பாதுகாத்து கொள்ள தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் (PPE kit) வழங்கப்பட்டு வருகிறது.

(v) கையேடுகள், பதாகைகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் கணிணி மூலமாக கொரோனா பெருந்தொற்று விழிப்புணர்வுவை ஏற்படுத்தி வருகிறது.

(vi) கொரோனா அறிகுறியுடன் தென்படுவோர்களை தனிமைப்படுத்துவதற்குகான வசதியினை துறைமுக கட்டிடங்களில் ரூபாய் 20 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

(vii) பெருநிறுவன சமுதாயப் பொறுப்பு திட்டத்தின் ஒருபகுதியாக, கொரோனா அறிகுறியுடன் தென்படுவோர்களை தனிமைப்படுத்தவதற்கு கூடுதலாக 54 படுக்கை

வசதிகளுடன் கூடிய 19 வார்டுகள் ரூபாய் 25 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் கோவிட்-19 தொற்று உலகளவில் பாதிப்பை ஏற்படுத்தி கொண்டுருக்கும் இத்தருணத்தில் அதனை எதிர்கொள்ளும் வகையில் அயராது சிறப்பாக பணியாற்றி கொண்டிருக்கும் துறைமுக உபயோகிப்பாளர்கள், கப்பல் முகவர்கள், அனைத்து அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் அயராது உழைக்கும் தொழிலாளர்களுக்கு தனது நன்றியினை தெரிவித்து கொண்டார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி